## R 1896 (page 258)

# நிழலான சிவப்புக்கிடாரி

# THE TYPICAL RED HEIFER.

அக்டோபர் 1-ஆம் தேதியினுடைய வாட்ச் டவர் பத்திரிக்கையில், இத்தலைப்பைக்குறித்து நாம் ஆராய்ந்திருந்தோம்; எனினும் அதை இரண்டு அல்லது மூன்று முறை கவனமாய் வாசித்தால், அது நமது வாசகர்களில் சிலருக்கு நன்மையாக இருக்கும். அப்படி வாசிக்கையில் பின்வரும் குறிப்புகளைத் தெளிவாய் மனதில் நிறுத்திக்கொள்ளுங்கள்:

### R1897 : page 258

(1) பிரதான ஆசாரியனால் பாவநிவாரணநாளின்போது ஏறெடுக்கப்பட்டதும், பிராகாரத்திற்குள் அடிக்கப்பட்டதுமானவைகள் மாத்திரமே, இந்தச் சுவிசேஷ யுகத்தில் நமது மாபெரும் பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்துவினால் பாவங்களுக்காக ஏறெடுக்கப்பட்ட "*விசேஷித்த பலிகளை*" குறிக்கின்றன - இது காளையினால் நிழல்படுத்தப்படும் அவருடைய பலியில் துவங்கி, அவரது சரீரமாகிய சபையின் பலியுடன் நிறைவுபெறுகின்றது; சபை அவரது கிருபையினால், அவருடைய பாடுகளில் ஐக்கியம் அடைந்துள்ளனர்; இவர்கள் "கர்த்தருடைய ஆட்டினால்" நிழற்படுத்தப்பட்டுள்ளனர். ஆசரிப்புக் கூடாரத்தின் விசேஷித்த பலிகள் என்கிற புஸ்தகத்தைப் பார்க்கவும்.

(2) நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்ட பாவத்திற்கான மற்ற பலிகள், பாவநிவாரணநாளைத் தொடர்ந்து ஏறெடுக்கப்பட்டன; இது பாவங்களுக்காக மனம்வருந்துவதன் மூலமும், துக்கிப்பதன் மூலமும் ஆயிர வருஷ காலங்களில், மனுக்குலத்தின் உலகமானது, பாவநிவாரணபலியின் புண்ணியங்களை ஏற்றுக்கொண்டு, அதைத் தங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்வதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

(3) சாமுயேல், எலியா, எலிசா, ஆபிரகாம், தாவீது மற்றும் ஆபேலினால் ஏறெடுக்கப்பட்ட "பலிகளானது" வேறுவகையானவைகளாகும்; இவை நியாயப்பிரமாணத்தில் இடம்பெறுவதில்லை, ஆகையால் அவைகள் நிழல்களல்ல. இப்பலிகளை ஏறெடுத்தவர்கள் ஆசாரியர்கள் அல்ல; மேலும் இவர்கள் ஏறெடுத்த பலிகளானது, நியாயப்பிரமாணத்தின்படி "வருஷந்தோறும்" தொடர்ந்து ஏறெடுக்கப்படும் "பாவங்களுக்கான நிழலான பலிகளுடன்" தொடர்புடையவைகள் அல்ல.

(4) பாவநிவாரணநாளின்போது பலியினை ஏறெடுத்த பிரதான ஆசாரியனால், சிவப்புக் கிடாரியானது அடிக்கப்படுகிறதில்லை; உடன் ஆசாரியனாகிய எலெயாசாராலும் அடிக்கப்படவில்லை; ஆசாரியர்கள் அல்லாத வேறொருவனால் அது அடிக்கப்படுகின்றது. ஆகையால் இந்தச் சிவப்புக் கிடாரியானது, பிரதான ஆசாரியனையோ அல்லது உடன் ஆசாரியனையோ அல்லது இந்தப் பாவநிவாரணநாளினுடைய எந்த ஒரு பலிகளையோ அடையாளப்படுத்துவதில்லை அல்லது நிழற்படுத்துவதில்லை. நாம் மேலே குறிப்பிட்டிருந்த கட்டுரையில், அது எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் இடம்பெறும் முற்பிதாக்களின் பாடுகளுடைய நிழலாய்க் கருதப்படுவதற்குரிய நமது தரப்பிலான காரணங்களைக் குறிப்பிட்டிருக்கின்றோம். அந்த முற்பிதாக்களில் வெகு சொற்பமானவர்களே, தங்களது தனிப்பட்ட அனுபவங்களில் எதையேனும் நிழற்படுத்தினவர்களாய் இருந்தனர். எனினும் அவர்களை ஒரு வகுப்பாராகப் பார்க்கும்போது, எதிர்காலத்தில் நிகழும் திரும்பக்கொடுத்தலின் வேலையில்/ சீர்ப்படுத்தும் வேலையில் அவர்களுக்கு ஒரு பங்கு இருக்கின்றது என்றும், தீட்டுக்கழிப்பு சம்பந்தமாக அந்த வேலை நிழற்படுத்தப்பட்டுள்ள காரியமானது, ஆயிர வருஷ காலப்பகுதியின் வேலையினை நிழற்படுத்துகின்றதாய் இருக்கின்றது என்றும் நாம் காண்பது நியாயமாகவே உள்ளது.

(5) ஆசாரியன் முதலாவது சிவப்புக்கிடாரியின் இரத்தத்தை எடுத்து, ஆசாரிப்புக்கூடாரத்துக்கு முன்புறம் தெளித்தார்; இப்படியாக இதன் மரணம், தேவனுடைய பலிபீடத்தில் ஏறெடுக்கப்படும்

பாவங்களுக்கான பலியைச் சுட்டிக்காட்டுவதை மற்றும் இதற்கு இசைவாய் இருப்பதைக் கற்பிக்கின்றதாய் இருக்கின்றது. பின்னர் அவர் கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவில் ஈசோப்பைப் போட வேண்டும்; இது சுத்திகரிப்பை, தீட்டுக்கழிப்பை அடையாளப்படுத்துகின்றது; ஒரு கேதுருக்கட்டையையும் போடவேண்டும் - இது நித்திய ஜீவனை அடையாளப்படுத்துகின்றது; சிவப்பு நூல் போடப்பட வேண்டும் - இது நம்முடைய பாவங்களுக்கான விலையாகிய கிறிஸ்துவின் இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றது (எண்ணாகமம் 19); இப்படியாக உலகம் பாத்திரமாயிராத முற்பிதாக்கள் மீது - அதாவது கல்லெறியுண்ட, வாளால் அறுக்கப்பட்ட, இன்னும் பல பாடுகள் பட்ட முற்பிதாக்கள் மீது குவிக்கப்பட்ட அவமானமானது, விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியமும், சத்தியத்தின் சுத்திகரிப்பும், நித்திய ஜீவனாகிய ஈவும் அவர்களுக்கு உத்தரவாதமாகிட அனுமதித்தது என்று கற்பிக்கப்பட்டுள்ளது.

(6) அநேகமாக எலெயாசாரால் நிழற்படுத்தப்படும் "இராஜரிக ஆசாரியத்துவத்தின்" உடன் ஆசாரியர்களில் ஒருவராக, அப்போஸ்தலன் பவுல் காணப்பட வேண்டும்; ஏனெனில் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் இவர் கொடுக்கும் சாட்சியின் மூலம், அவர்களது விசுவாசம் மற்றும் பாடுகள் (சுட்டெரிக்கப்படுதல்) நமக்கு இசைவாய் இருப்பதைச் சுட்டிக்காண்பித்துவிட்டு, "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக" முடியாது என்றபோதிலும், அவர்கள் சுத்திகரிக்கப்பட்டுள்ளனர் என்றும், கிறிஸ்துவின் இரத்தமானது அவர்களை ஏற்கத்தகுந்தவர்களாக்கியுள்ளது என்றும், அவர்கள் நித்திய ஜீவனாகிய ஈவில் பங்கடைவார்கள் என்றும் நமக்கு இவர் உறுதிப்படுத்தும் விதத்தில், ஈசோப்பையும், சிவப்பு நூலையும், கேதுரு கட்டையையும் நெருப்பில் போட்டார். (எபிரெயர் 11:40)

(7) அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயர் 9:13-ஆம் வசனத்தில் நிழலான சுத்திகரிப்பைக்குறித்துப் பேசுகையில், அவர் (பாவநிவாரணநாளின் பலிகளாகிய) காளைகள் மற்றும் வெள்ளாட்டுக்கடாக்களின் இரத்தம் குறித்தும், சிவப்புக்கிடாரியின் சாம்பல் தண்ணீரோடு தெளிக்கப்படுதல் முதலானவைகள் குறித்தும் குறிப்பிடுகின்றார்; ஆனால் இவைகளின் நிஜத்தைக்குறித்துப் பேசுகையில், அவர் கிறிஸ்துவினுடைய இரத்தத்தோடு மாத்திரம் முடித்துவிடுகின்றார்; சிவப்புக்கிடாரியினுடைய சாம்பலுக்கான நிஜத்தைக்குறித்து எதுவும் குறிப்பிடவில்லை; ஏனெனில் அதற்கு நம்முடைய சுத்திகரிப்போடு எந்தச் சம்பந்தமுமில்லை; மாறாக அது நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளது போன்று, ஆயிர வருஷ காலத்தின் போதான உலகத்தினுடைய தீட்டுக்கழிப்பு தொடர்புடையதாகும். ஒருவேளை சிவப்புக்கிடாரியும், அதன் சாம்பலும், சுவிசேஷ யுகத்தினுடைய சுத்திகரிப்புடன் தொடர்புடையவைகளாய் இருந்திருக்குமானால், அவ்வுண்மையினை அப்போஸ்தலன் நிச்சயமாகவே இங்குக் காண்பித்திருப்பார்; ஏனென்றால் அப்போது "ஏற்றகால சத்தியமாய்" காணப்பட்ட தேவனுடைய ஆலோசனைகளில் ஒன்றையும் அப்போஸ்தலன் மறைத்துவைக்கவில்லை. தமது வீட்டாரின் பந்தியில், ஏற்றகால ஆகாரத்தைக் கர்த்தர் கொடுத்துக்கொண்டிருப்பதற்காக, அவருக்குத் துதி உண்டாவதாக! (லூக்கா 12:37)

---